உ

சிவமயம்

மணிரத்ன மாலை

(ஸ்ரீ ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் அருளியது)

தமிழாக்கம் :

கவியரசு, வித்துவான்,

திரு. கு. நடேச கவுண்டர், P. O. L.,



இந்நூல்

திரு. கவியரசு அவர்கள்

26 – 5 – 1972 ஆம் நாள் சிவபதம்

அடைந்ததை ஒட்டி 4—6—1972 இல்

நடைபெற்ற ஒளிவழிபாடன்று

வெளியிடப்பட்டது.

காந்திதாசன் அச்சகம், கோவை-9 தொலைபேசி 25354

உ

சிவமயம்

மணிரத்ன மாலை

(ஸ்ரீ ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் அருளியது)


தமிழாக்கம் :

கவியரசு, வித்துவான்,

திரு. கு. நடேச கவுண்டர், P. O. L.,

இந்நூல்
திரு. கவியரசு அவர்கள்
26–5–1972 ஆம் நாள் சிவபதம்
அடைந்ததை ஒட்டி 4—6—1972 இல்
நடைபெற்ற ஒளிவழிபாடன்று
வெளியிடப்பட்டது.

[illegible] [illegible]



" உயருந் திருநீற் றொளிநுதலும்
உருத்தி ராக்க மணிமார்பும்
மயர்வில் கேள்வி மலிசெவியும்
வள்ளல் திருப்பேர் சொலப் பொடிக்கும்
வியர்வும் அன்பு மொழிமழையும்
விளங்கும் **நடேசன்** என்றதிருப்
பெயரும் நினைக்க நினைக்கஎன்னுட்
பெருகும் உவகைக் கடல்மாதோ "

— *மதுரகவி*

உ

சிவமயம்

திரு. கவியரசு அவர்களின்

வாழ்க்கைக் குறிப்பு.

கொங்கு நன்னாடு செய்த நுங்கமா தவத்தின் தோன்றி என்றுமுள தென்றமிழ் அன்னையின் இணையார் திருவடிக்குப் பன்னரிய பாமாலை பல்சார்த்தி, நான்மறைச் சைவம் நலமுற வளர்த்து, மண்டிணி ஞாலத்துப் பொன்றாப் புகழ் நிறுவிச் சென்றவர் முதுபெரும் புலவர் கவியரசு வித்வான் திரு. கு. நடேச கவுண்டர் அவர்கள் ஆவர். அவரது வாழ்க்கை வரலாறு சுருக்கமாகக் கீழே தரப்படுகின்றது

தோற்றம் :

திரு கவியரசு அவர்களின் மூதாதையர் புரையாடு சோலைப்புக்கொளியூர் அவிநாசிக்கு வடபால் உள்ள சேயூரைச் சேர்ந்த கொங்கு வேளாண் குடியினராவர். அவ்வூருக்கு அருகிருக்கும் பழமையான சிவாலயத்தில் அரும்பணி பலகுயிற்றிப் பெரும்புகழ் கொண்டவர்கள். நித்தலும் எம்பிரானுடைய கோயில்புக்கு வழிபட்டு வந்த அன்னவர் வழியில் தோன்றிய திரு. குமாரசாமிக் கவுண்டருக்கும் திருவாட்டி அங்கம்மாளுக்கும் குமாரராய்ச் சைவமும் தமிழும் தழைத்தினி தோங்க 2—4—1901-ஆம் நாள் தோன்றினார் திரு. கவியரசு.

இளமையும் கல்வியும் :

இளமையிலேயே தந்தையை இழந்த கவியரசு தம் தாயின் அரவணைப்பில் கவலை தோன்றாது வளர்க்கப் பெற்றார். கோவையில் இலண்டன் மிஷின் பள்ளியில் உயர்நிலைக் கல்வியைப் பெற்றபின், தையல் வேலையில் தம் வாழ்க்கையைத் தொடங்கினார். பின்னர்க் கோவையில் அக்காலத்துப் புகழ்

பெற்று விளங்கிய வழக்கறிஞர் களாகிய ஜேசுதாசன் பாரட்லா திருப்பூர், மண்டலம் வெங்கட்ரமண ஐயர், தாண்டவஞ் செட்டியார் என்பவர்களிடம் குமாஸ்தாவாகப் பணியாற்றி வந்தார். ஓய்வு கிடைத்த போதெல்லாம் மருதமலை ஆண்டவர் சந்நிதிக்குச் சென்று இறைவனை வழிபட்டு வருவார். அருணகிரியார் பாடிய சந்தத் திருப்புகழ்ப் பாடல்கள் அவர்தம் கருத்தைக் கவர்ந்ததால் அவற்றை மனனம் செய்து பாடி மகிழ்வார். திருப்புகழ்ப் பாடல் இசையில் மூழ்கிய அவர் மனம் பொருளையும் அறிய முற்பட்டது.

தமிழ்க் கல்வி :

தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றல் வேண்டும் என்ற பேரவாவால் உந்தப்பட்ட கவியரசு தமிழறிஞர்கள் இருக்கும் இடங்களை நாடிச் செல்லலானார். அந்நாளில் தமிழ்ப் புலமையில் ஊறியவர்களாகிய திரு. S. வையாபுரிப்பிள்ளை, திரு. C. S. சொக்கலிங்கம்பிள்ளை, சிரவணபுரம் கௌமார மடாலயம் தவத்திரு. கந்தசாமி சுவாமிகள் ஆகிய பெருமக்கள் பால் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையாகப் பயின்று தமிழ்ச் சங்கத் தேர்விலும் முதன்மையாக வெற்றி பெற்றார். பல்லாவரம் பொதுநிலைக் கழகத்தே தங்கியிருந்து தவத்திரு மறைமலையடிகள் பால் சித்தாந்தப் புலமையும் சங்கநூற் புலமையும் கைவரப் பெற்றார். ஜலகண்டாபுரம் புலவரேறு திரு. வரதநஞ்சையபிள்ளை அவர்களிடமும் திரு. அ. கந்தசாமிப் பிள்ளை அவர்களிடமும் தொல்காப்பியத்தில் தமக்கிருந்த ஐயங்களைப் போக்கிக் கொண்டார்.

இல்லற வாழ்வு :

திரு. கவியரசு அவர்களுக்கு இல்லறச் செல்வியாக வாய்த்தவர் திருவாட்டி இலட்சுமி அம்மையார் ஆவார். மங்கலமான மனை மாட்சியின் நன்கலமாக இவருக்கு இரு புதல்வரும் நான்கு புதல்வியரும் உள்ளனர். எச்சமென்ன ஒருவர் மக்கட்கு வைப்

பது விச்சையன்றி வேறில்லை என்பதை அறிந்த கவிஞர் பெருமான் தம் மக்களைக் கல்வி கேள்விகளில் மேம்பட்ச் செய்தார்

பத்தி ஒழுக்கமும் மெய்த்தவர் தொடர்பும் :

மதிருடும் அண்ணலார் அடியாரை அமுது செய்வித்தலும், உண்பதன் முன் மலர் பறித்திட்டு உண்ணலும் தம் வழக்காகக் கொண்ட தாயாரால் வளர்க்கப்பட்ட திரு. கவியரசு அவர்களுக்கு இறையன்பும், அடியார் பத்தியும் இருந்ததில் வியப்பில்லை குருடிமலைச் சாரலில் அமைந்துள்ள அனுவக் குமாரர் ஆலயத்தில் திருமுடி சுவாமிகளின் சமாதிக் கோவிலுக்கு அடிக்கடி சென்று செந்தமிழ்க் கவி புனைந்து பழகுவார். பொள்ளாச்சி வட்டம் பொம்ம நாய்க்கன்பட்டியில் அக்காலத்துப் பேரருள் துறவியாக வாழ்ந்து வந்த ஸ்ரீலஸ்ரீ அழுக்கு சுவாமிகளிடத்து இவருக்கு மிகவும் ஈடுபாடுண்டு. பழநி நந்தியாசிரமத் தலைவர் தவத்திரு சாது சுவாமிகளால் சிவ தீட்சை செய்விக்கப்பெற்று ஆறெழுத்து மந்திரமும் உபதேசிக்கப்பெற்றார். அதன் பயனாய் அவர் தம் வாழ்நாள் முழுதும் சிவபூசா துரந்தரராக விளங்கி வந்தார்.

தமிழாசிரியப் பணி :

திரு. கவியரசு அவர்கள் கோவை நகராண்மைக் கழக உயர் நிலைப் பள்ளியில் 25 ஆண்டுகளுக்கு மேல் தமிழாசிரியராக அரும் பணியாற்றினார். இடையே ஈராண்டுகள் அரசினர் கலைக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகத் தொண்டு புரிந்தார். ஓய்வு பெற்ற பின்னர், பேரூர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரியில் ஆசிரியராகவும் பின்னர் முதல்வராகவும் சில ஆண்டுகள் தமிழ்ப்பணி புரிந்து ஓய்வு பெற்றார். அன்னாரிடம் தனியாகவும், பள்ளி, கல்லூரி வாயிலாகவும் தமிழ் கற்றுத் தேர்ந்த புலவர் எண்ணிலர். இவர் கல்வித் துறையிலும் அரசுத் துறையிலும் பொதுத் துறையிலும் சிறந்து விளங்கி வருகின்றனர்.

இறைபுகழ் இயம்பல்

விடுமுறை நாட்களில் திரு. கவியரசு அவர்கள் மருதமலை சென்று முருகப் பிரானை வழிபடுவதோடு, வடவழி மருதவுரை நீழல் விநாயகர் சன்மார்க்க சங்கத்தில் தலைமை தாங்கிப் பல்லாண்டுகள் சைவச் சொற்பொழிவாற்றுவதும், அங்குள்ள காளிதாசர் மடத்தில் மாணாக்கருக்குத் திருவாசகமும், திருக்குறள் போன்ற நூல்களைப் பாடஞ் சொல்லுதலும் வழக்கம். திரு. மன்ன அக்காலத்து அவருக்கு உறுதுணையாயிருந்தோர் மேலும் முத்துக் கவுண்டரும், திரு. வீரப்ப கவுண்டருமாவர். முதலியாரவர்கள் சிவக்கவிமணி திரு C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் இல்லத்தில் தேவாரம் ஓதிப் பழகியும் வருவார். பேரூர்ப் பங்குனி உத்திர விழாவின்போது பத்து நாளும் அங்குத்தங்கித் தேவாரக் குழுவில் ஒருவராய்த் திருமுறை இசைத்து மகிழ்வதுண்டு.

கவிதா சக்தியும் வடமொழிப் பயிற்சியும் :

திரு. கவியரசு அவர்கள் செந்தமிழ்க் கடல் முகந்து கவி மாரி பெய்யும் மேக மன்னவர். "நுண்பொருள் ததும்பிட நறுங்கவி நினைந்தளவில் நுவலவல பாவலர்". இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறையிலும் இயன்ற நூல்கள் பலப்பல அவரால் இயற்றப்பட்டுள்ளன. முத்தமிழ்த்துறை போய வித்தகராகிய அவர் வடமொழியையும் நன்கு கற்றறிந்தார். இவருக்கு வடமொழி பயிற்றியவர் கோவை வித்வ சிரோமணி பிரம்மஸ்ரீ அனந்த நாராயண சாஸ்திரிகளாவர். வடமொழிப் புலமையும் சேர்ந்த காரணத்தால் திரு. கவுண்டர் அவர்களால் பலப்பல வடமொழி நூல்கள் தமிழில் ஆக்கம் பெற்றுள்ளன.

சிறப்புப் பட்டங்கள் :

இப்புலவர் பிரானின் அருந்தமிழ்ச் சேவையை நன்கறிந்த மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதீனத் தலைவர் 'செந்தமிழ்க் கவிமணி' என்ற பட்டத்தையும், கோவைத் தமிழ்ச் சங்கத்

தார் 'கவியரசு' என்ற பட்டத்தையும், தொண்டைமண்டல ஆதீனத் தலைவர் 'சித்தாந்தச் செல்வர்' என்ற பட்டத்தையும், பேரூர் ஆதீனத் தலைவர் 'திருமுறைச் செல்வர்' என்ற பட்டத்தையும் வழங்கிச் சிறப்பித்தனர். காஞ்சி காமகோடி பீடாதிபதிகளும், சிருங்கேரி ஜகத்குரு சுவாமிகளும் கோவைக்கு வருகை புரிந்த போது திரு. கவியரசு அவர்களை நேரில் அழைத்துப் பாராட்டி அருளாசி வழங்கினார்கள்.

இறுதிக் காலம்:

தெய்வ ஒண்டீந் தமிழ்ப் பாசுரங்களை ஓதியும், நுண் பொருள் தெரித்தும், திருமுறை வகுப்புக்கள் நடத்தியும், சிவ பூசை புரிந்தும், மாணாக்கருக்கு இலக்கண இலக்கியங்களைப் போதித்தும் தூய ஒழுக்கினராய் அருங்கலைச் செல்வராய்' செந்தமிழ் மலையாய்ச் சிறிதும் குறைவின்றி வாழ்ந்து வந்த திரு கவியரசு அவர்கள் 26—5—1972-ஆம் நாள் வெள்ளிக் கிழமை வைகாசி விசாக விழாவும் பிரதோஷமும் கூடிய நன்னாளில் — பிரதோஷ வேளையில் — மாலை 6-45 மணிக்குத் தமது 72-ஆம் வயதில் தம் பூத உடலை நீத்துச் சிவபதம் அடைந்தார்கள். அவரது புனித ஆன்மா ஆடல் எடுத்திட்ட பாத நீழலில் அமைதி பெற வேண்டுவோமாக.

வாழ்க கவியரசு !

வாழ்க அவர் தமிழ்த் தொண்டு !!



" தன்பாட்டுக் கிணையில்லாச் சம்பந்தன் தாள்போற்றி
இன்பாட்டுத் திருப்பொதுவில் இயற்றுமடி யிணைபோற்றி
என்பாட்டுக் கிருந்தாலும் எழிற்பாட்டுக் கொண்டருளி
அன்பாட்டும் எட்டிகுடி அமர்வேலன் அருள்போற்றி "

— கவியரசு

சிவமயம்

மணி ரத்ன மாலை

[ஸ்ரீ ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் அருளியது]
மொழிபெயர்ப்பு — கவியரசு

பிறவிக் கடற்குப் பெரும்புணை யாவது 1
அறவாழி யானடி அரவிந் தம்மே

புலனெறிப் புந்தியைப் புகவிட் டோனும் 2
அவ்வழி யடைத்த அறிவுடை யோனும்
பந்தப் பட்டோன் பந்தமற் றோனே.
புன்புலா லுடம்பே பொல்லா நிரயம்;
அவாவை அறுத்தலே அரும்பெறல் வீடாம்.

ஆன்ம போதமே அறுக்கும் பாசம்; 3
அரனே பாசம் அறுக்க அருளும்.
மாதரை விழைந்து காண்பது தானே;
தீதுறு நிரயம் சேர்ப்ப தாமே.
இன்ப வீட்டில் இசைவிப் பதுகேள்
துன்பமோ ருயிர்க்கும் செய்யா மையே.

பதியை யுணர்ந்து பதைப்பிலா தவனே 4
அமைதி இன்பம் ஆர்பவ னுவான்;
மெய்யும் பொய்யும் விளங்க அறிந்தோன்
எய்யாது விழித்திங் கிருப்போ னாமே;
அடங்கா ஐம்புல னுக்கும் பகையே;
அடங்கிய புலன்கள் அரும்பெறல் நட்பே.

இச்சைமிக் கோனே ஏழையில் மூத்தோன்; 5
போதுமென் மனத்தோன் பொன்னருள்பெற்றோன்;
ஆற்றல் இருந்தும் அதுகொடு முயலான்
மூச்சுட னிருக்கும் முடைப்பிணம் ஆவான்
ஆசை அடங்கிய அறிஞர் தாமே
தம்முயிர்க் கமுத சமான மாவரே.

யானென தென்னும் நலமில் செருக்கே 6
யாரையுந் தளைக்கும் பாச மாமே;
மாதர் மயலே மதுவினும் மயக்கும்;
காமக் குரோதர் கண்ணிலா ராவர்;
ஏமப் புகழழிவு இறப்பினும் கொடிதே.

பயனுள போதிப் பவனே குரவன்; 7
அவனன் புடையோ னொருவன் சீடன்;
பன்னெடு நாளாய்ப் பருவரல் செயுநோய்
இன்னாப் பிறப்பிறப் பென்பவை தாமே;
அந்நோய் அறுக்கும் அருமருந் தாவது
மெய்பொய் தேரும் விவேக மொன்றே.

அணியிற் சிறந்த தரியநற் குணமே, 8
தவத்திற் சிறந்தது தவறிலா மனமே;
விட்டிடத் தக்கன விழைவும் பொருளும்;
விட்டிடா தோரும் மேன்மை யுடையன
நூலும் குருவும் நுவன்றவை தாமே.

சாது சங்கமும் தானடங் குதலும் 9
விவேகமும் விழைவு விடலும் சான்றோர்
பழக்கமும் சிவாநு பவந்தரு வனவாம்;
நித்தியா நித்திய நிண்ணய மோர்ந்து
நித்தன் அன்பு நீங்கார் நல்லோர்.

கொலையே உயிரைக் களற்றுங் கடுஞ்சுரம்; 10
நித்திய அநித்திய நிர்ணயந் தேரான்
முந்தி நிற்பவனும் மூடருட் டானே;
சிவனொடு திருமால் சேவடி நினைவதே
நவையற முதற்செயும் நல்வினையாமே;
மறந்தும் இன்னா மன்னுயிர்க் கியற்றாச்
சிறந்த வாழ்வே தெய்வீக வாழ்வாம்.

எண்குணத் தான்கழல் ஏத்துங் கல்வியே 11
உண்மைக் கல்வியென் றுணரப் படுமே;
போதமென் பதுதளை போகிய நிலையே;
தனைத்தான் பெறலே தனிப்பெறும் பேரும்;
தன்னெஞ் சடக்கிய சான்றோர் தாமே
உலகெலாம் வென்ற உரவோர் ஆவர்;

மாரன் கணையால் வருந்தா தவனே 12
சூரரிற் பெரிய சூரனு வானே;
எழிலிள வனிதை வலிதின் எய்தினும்
விழையா தவனே மேதகு ஞானி;
அழியா அமைதி யாளனும் அவனே;
நன்னர் நடுநிலை நழுவா
மன்னனு மவனென வழுத்திட லாமே.

விடங்களிற் கொடிது விடய நுகர்ச்சி; 13
புலன்வழி யின்பம் பொருந்த விழைவோன்
உலைவரு துன்பம் உழப்போன் என்றும்;
பிறர்நலங் கருதும் பெற்றி யோனே
இறவா அருள்நலம் எய்தி யோனே;
தத்துவ நிட்டை சார்ந்தோ னொருவனே
இத்தரை யோர்தொழற் கேற்றவ னாவான்;

எத்தகை யின்னல் எய்திய போதினும் 14
வேதா கமநெறி விலகா தொழுகி
அளவரும் அவாவை அகற்றித் தீய
வினைத்தொடர் கழற்றி மெய்ந்நெறி நிற்போன்
எவனவன் நல்லோன் என்னத் தக்கோன்
பேதைமை தானே பிரபஞ்ச நெறிதனக்
கேது வென்றே இயம்பினர் புலவர்.

சிற்றின் பத்திற் சிக்கி மோசம் 15
போகா தவனே புலன்வென் றோரின்
முதல்வ னுக் முன்னிற் பவனே;
கழலா விலங்கு கடிமனைக் கிழத்தி;
எல்லோ ருக்கும் எளியனு வாழ்தல்
நல்லோர் அனைவரும் கொள்ளுமேற் கோளாம்,

மைவிழி யார்தம் மனமும் செயலும் 16
எய்ய யார்க்கும் இயலா தென்ப;
எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடல்போல்
கிட்டாப் பொருள்பால் கெட்டாலு மாசை
விட்டே விலகார் மேதினி யோரே.
இலங்கும் அறிவிலோன் விலங்கோ டொப்பான்;

பேதை பாவி பிறர்வா ழப்பொறுன் 17
சிறுமதி யிவரைச் சேரா தகல்க;
சான்றோர் சார்பும் சங்கரற் கன்பும்
பற்றினை அகற்றலும் பரம இன்ப
வீடு விழைந்தோர் மேற்கொள் வனவே.

இச்சையில் நிரம்ப இரப்பது குறைவே; 18
இரவா மையே பெருமைக் கேது;

பிறவா தவரே பிறந்தோ ராவர்
இறவா தவரே இறந்தோ ராவர்.

குறிப்புணர்ந் தவையினிற் கூறுந் திறமிலோன் 19
மூங்கை என்றே ஈங்கிக ழப்படும்;
அறிவுரை கொள்ளா தவனே செவிடன்;
நாரியர் தாமே நம்பொரு ளவராம்.

செம்பொரு ளத்து விதசிவம் ஒன்றே 20
பெருமையிற் சிறந்தது மலம்றும் ஆன்மா;
துன்பம் அறுக்குந் தொழிலே தென்னில்
காமநா சனையும் கஞ்சநா சனையும்
அன்பொடு நித்தம் அருச்சிப் பதுவே.
வெலற்கரும் பெரும்பகை விளம்பக் கேண்மோ 21
கழிபெருஞ் சினமே, இழிதகைப் பொய்யே,
பேர வாவே, பிறர்நலம் பொறாமையே
கடக்கருங் காமம் எனப்படு பகையே;
எத்தனை பெறினும் இதுபோ தாதெனும்
இச்சைக் குண்டோ என்றுந் திருத்தி?
யானென தென்பதே இன்னலின் விதையாம்.

வாயினுக் கருங்கலம் வளமிகு கல்வி; 22
வாய்மை என்பது மன்னுயி ரெதற்கும்
இன்பம் பயக்கும் இனிய மொழியே;
தள்ளத் தக்கது தையல ரின்பம்;
கொள்ளத் தக்கது குறைவில் உரிமை.

பெட்டாங் கோடும் பேய்மன வாதை 23
கெட்டால் வீடு கிட்டும் என்ப;
பாச நாசம் பட்டுப் பரம

சிவாநு பவந்தான் சிந்திக்கு மாகில்
அச்சம் என்பது அணுவும் இல்லை;
கூரறி வின்மையே கூர்ந்த துன்பாம்;
பயன்தரும் அறிவு பாலித் தோரும்
வயதுமூத் தோரும் மதிக்கத் தகுநராம்.

அந்தகன் வந்தபோ தறிவு படைத்தோன் 24
அந்தோ செய்குவ தியாதென வினவின்
சிந்தனை யொருக்கிச் சிவனடி மலரை
வந்தனை செய்வதே யன்றிமற் றின்றே.

தீயநட் புடையோர் திருடர் ஆப; 25
அருநூ லுணர்ந்தோர் அவையிற் சிறந்தோர்;
ஆருயிர் வாழும் நாளில் அமைதியும்
இன்ப மு முயிருக் கீவது கல்வி;
கொடுக்கப் பெருகும் கொழுநிதி கல்வி.

இச்சகம் பேசும் ஏவலர் தமையும் 26
புல்லறி வினராம் பொதுமக்கள் மொழியும்
நல்லறி வுடையோர் நம்புகி லாரே;
உறுகணில் உதவும் ஒருவனே நண்பன்;
கடைபோகக் காப்பவ னவனே தந்தை;

உண்மையின் பறிவாம் உருவச் சிவனை 27
அறிந்தபின் எதனை அறியவேண் டுவதே?
எங்கும் நிறைந்த இறைவனை அறிந்தால்
அங்க ணுலகம் அனைத்தும் தெரியும்.

பிரம்மப் பொருளின் பெற்றி ஓர்ந்து 28
சிவாநு பவநுகர் செல்வர் உலகில்

அரியர் காண்டற் கியார்க்கும் மாதோ.
மாதர் மைந்தர் எனுமாறு பாடும்
காதலும் எளியவோ கடப்பத் தானே.

நீதி நெறியற நெறிவில கியவன் 29
வேதம் ஓதியும் விதிவழி ஒழுகான்
பேதை விலங்கினும் பெரிதிழிந் தவனும்.
நஞ்சினுங் கொடிய ளாயினும் மனைவியை
நெஞ்சுகந் திங்கித மாக விழைவான்
கொஞ்சமு மறிவு கூர்மை யிலோனே.
நண்பு ளோர்போல் நடிப்பினும் சிறிதும்
பண்பிலாப் பகைஞர் பந்துமித் திரரே.

செல்வமும் இளமையும் சீவனுந் தெரியின் 30
மின்னினு நிலைமை யில்லா தனவே;
ஏற்போன் தகுதிக் கேற்பவே தானம்
பயன்தரும் என்று பகர்ந்தனர் அறிந்தோர்.
இறுதி யாமுயிர்ப் பிருக்கும் போதும்
வெறுத்தல் வேண்டும் வெவ்வினை தமையே;
உயிர்விடும் போதும் உற்ற துணையாம்
சிவன்கழல் துதிக்கும் திறமற வாதே.

புராரி யுகக்கும் புண்ணிய மாவது 31
முராரி திருவடி முன்னித் தொழலே;
தொல்லை யுலகம் நில்லா தென்பதும்
எல்லையி லின்பத் திறைமல ரடியும்
அல்லும் பகலும அறிஞர் நினைவரே.

நூற்பயன்

இம்மணி ரத்தின மாலை யோர்வான்
மைம்மலி கண்டன் மாலெனு மிவ்வுரை
வணங்குதல் தவிரா மாண்புள ஞுவான்
இணங்குக மங்களம் எவ்வுயிர்க் கும்மே.

இந்நூல் சிவராத்திரி நாளன்று திரு கவியரசு அவர்களால் பெயர்த்து எழுதப்பெற்றது.

